(ஒன்பதாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

இல. 1(13).]

# பாராளுமன்றம்

## 1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2023 மே 12 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2023 மே 23, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— 2002 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின்படி தற்போதைய தலைவர் மற்றும் உறுப்பினர் திரு. ஜே.டபிள்யு.எம்.ஜே.பி.கே. ரட்நாயக்கவை அந்த உறுப்புரிமையிலிருந்து நீக்குவதற்கான உரை,— 2002 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின்படி, தற்போதைய தலைவர் மற்றும் உறுப்பினர் திரு. ஜே.டபிள்யு.எம்.ஜே.பி.கே. ரட்நாயக்க, மேற்படி சட்டத்தின் பிரிவு 7(அ) (iii) மற்றும் 7(அ) 7(v) இன் கீழ் தலைவர் பதவி மற்றும் உறுப்புரிமையில் தொடர்ந்திருக்கத் தகுதியற்றவர் என, 2023 மே 09 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரின் 2023 ஏப்ரல் 18 ஆம் திகதிய அறிக்கையானது தெரிவித்துள்ளதனால், மேற்படி சட்டத்தின் பிரிவு 7(இ) இன் நியதிகளுக்கமைய திரு. ஜே.டபிள்யு.எம்.ஜே.பி.கே. ரட்நாயக்கவை அந்த ஆணைக்குழுவின் உறுப்புரிமையிலிருந்து நீக்குவதற்கு இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

*

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் 3(3) ஆம் பிரிவின் கீழ் துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி வரி தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 டிசம்பர் 31 ஆம் திகதிய 2312/67 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.05.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு 2022 டிசம்பர் 31 ஆம் திகதிய 2312/68 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.05.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்,— காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின், 22 ஆம் பிரிவின் கீழ் மதுபானங்கள் மீதான மதுவரித் தீர்வை தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 டிசம்பர் 31 ஆம் திகதிய 2312/70 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.05.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 07/2022)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— புகையிலை வரி (திருத்தச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2004 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, புகையிலை வரி (திருத்தச்) சட்டத்தின் திருத்தப்பட்டவாறான 1999 ஆம் திகதிய 8 ஆம் இலக்க புகையிலை வரிச் சட்டத்தின் கீழ் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 21 ஆம் பிரிவின் கீழ் பீடிக்கான புகையிலை வரியொன்றினை விதித்தல் தொடர்பாக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 டிசம்பர் 31 ஆம் திகதிய 2312/71 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.05.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— முத்திரைத் தீர்வைச் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வைச் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் முத்திரைத் தீர்வை தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 டிசம்பர் 31 ஆம் திகதிய 2312/73 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.05.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி,— 2021 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் 155(1) ஆம் பிரிவின் கீழ் கொழும்புப் பங்குச் சந்தையின் "Over the Counter Platform" மீது மேற்கொள்ளப்படும் தாபனப் படுகடன் பிணையங்களிலுள்ள ஒவ்வொரு கொள்வனவுப் பரிமாற்றங்கள் மீது அறவிடப்பட வேண்டிய செஸ் வரி விகிதம் தொடர்பாக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2023 சனவரி 26 ஆம் திகதிய 2316/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.05.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— நிதிச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2003 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 2(1) ஆம் பிரிவின் கீழ், புறப்படுகை வரி தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 டிசம்பர் 09 ஆம் திகதிய 2309/37 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.05.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— நிதிச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2003 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 2(1) ஆம் பிரிவின் கீழ், புறப்படுகை வரி தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2023 சனவரி 11 ஆம் திகதிய 2314/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.05.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— நிதிச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 26 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, 22 ஆம் பிரிவின் கீழ் சர்வதேச தொலைத்தொடர்பு இயக்குநர் அறவீடு தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2023 சனவரி 01 ஆம் திகதிய 2312/80 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.05.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— நிதிச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 19 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 51 ஆம் பிரிவின் கீழ் மோட்டார் வாகனங்கள் மீதான சொகுசு வரி தொடர்பாக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 டிசம்பர் 31 ஆம் திகதிய 2312/69 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.05.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— நிதிச் சட்டத்தின் கீழ் கட்டளைகள்,— 2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 19 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 51 ஆம் பிரிவின் கீழ் மோட்டார் வாகனங்கள் மீதான சொகுசு வரி தொடர்பாக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2023 பெப்ரவரி 10 ஆம் திகதிய 2318/53 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.05.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளைகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— உண்ணாட்டு இறைவரிச் சட்டத்தின் கீழான தீர்மானம்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் செக் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையில் இரட்டை வரிவிதிப்பைத் தவிர்ப்பதற்கும் வருமானத்தின் மீது வரிகொடாது தட்டிக்கழிப்பதைத் தடுப்பதற்குமான 2023 பெப்ரவரி 03 ஆம் திகதி செய்துகொள்ளப்பட்டதும், 2023.05.11 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான உடன்படிக்கை 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 75(1) பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்,— குடிவருவோர், குடியகல்வோர் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (351 ஆம் அத்தியாயமான) குடிவருவோர், குடியகல்வோர் சட்டத்தின் 23 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 52 ஆம் பிரிவின் கீழ் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டதும் 2023.05.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— ஹோடெல் டிவலொப்பர்ஸ் (லங்கா) பீஎல்சியின் வருடாந்த அறிக்கை (2017),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் 2023.01.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2017.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய ஹோடெல் டிவலொப்பர்ஸ் (லங்கா) பீஎல்சியின் 2017 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.03.10 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.03.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— ஹோடெல் டிவலொப்பர்ஸ் (லங்கா) பீஎல்சியின் வருடாந்த அறிக்கை (2018),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் 2023.01.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2018.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய ஹோடெல் டிவலொப்பர்ஸ் (லங்கா) பீஎல்சியின் 2018 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.03.10 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.03.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— ஹோடெல் டிவலொப்பர்ஸ் (லங்கா) லிமிடட்டின் வருடாந்த அறிக்கை (2019),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் 2023.02.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2019.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய ஹோடெல் டிவலொப்பர்ஸ் (லங்கா) லிமிடட்டின் 2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.03.10 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.03.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— ஹோடெல் டிவலொப்பர்ஸ் (லங்கா) லிமிடட்டின் வருடாந்த அறிக்கை (2020),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் 2023.02.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2020.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய ஹோடெல் டிவலொப்பர்ஸ் (லங்கா) லிமிடட்டின் 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.03.10 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.03.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— ஹோடெல் டிவலொப்பர்ஸ் (லங்கா) லிமிடட்டின் வருடாந்த அறிக்கை (2021),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் 2023.02.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2021.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய ஹோடெல் டிவலொப்பர்ஸ் (லங்கா) லிமிடட்டின் 2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.03.10 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.03.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

## 2023 மே 25, வியாழக்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

**(2023, மே 25, வியாழக்கிழமை)**

3266/2023

கௌரவ எம்.எஸ். தௌபீக்,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாதாந்த அவைக் கூட்டங்கள் நடாத்தப்படுகின்ற மண்டபங்களில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளுக்கான சமகால உரைபெயர்ப்பு வசதிகள் இல்லாத தென் மாகாண உள்ளூராட்சி மன்றங்கள் யாவை என்பதையும்;

(ii) தமிழ் மொழியைப் பயன்படுத்தும் மக்கள் கணிசமான எண்ணிக்கையானோர் வாழும் தென் மாகாணத்தின் உள்ளூராட்சி மன்ற அதிகாரப் பிரதேசங்கள் இனங்காணப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி உள்ளூராட்சி மன்ற அதிகாரப் பிரதேசங்கள் யாவை என்பதையும்;

(iv) நிருவாக மொழியாக சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளும் பயன்படுத்தப்பட வேண்டுமென பிரகடனம் செய்யப்பட்டுள்ள அதிகாரப் பிரதேசங்கள் உள்ளடங்கும் தென் மாகாணத்தில், உள்ளூராட்சி மன்றங்களின் மாதாந்த அவைக் கூட்டங்கள் நடாத்தப்படுகின்ற மண்டபங்களுக்கு சமகால உரைபெயர்ப்பு வசதிகளைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3267/2023

கௌரவ எம்.எஸ். தௌபீக்,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தினதும் 1975 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வீதிகளுக்குப் பெயரிடுதல் மற்றும் நினைவுச் சின்னங்களை அமைத்தல் மற்றும் கட்டுப்படுத்துதல் சட்டத்தினதும் ஏற்பாடுகளை மீறி திக்வெல்ல பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள “அசாத்புர” கிராமத்தின் பெயர் மற்றும் திக்வெல்ல - பெலியத்த பிரதான வீதியின் இருமருங்கிலும் “யோனக்கபுர” என குறிப்பிடப்பட்டிருந்த பெயர்ப்பலகைகள் அகற்றப்பட்டு வேறு பெயர்கள் பொறிக்கப்பட்ட பெயர்ப்பலகைகள் பொருத்தப்பட்டுள்ளன என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி விடயம் தொடர்பில் பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் செயலாளருக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) இவ்விடயம் குறித்து தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரினால் திக்வெல்ல பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் செயலாளருக்கு அனுப்பிய 4/2/4 ஆம் இலக்க மற்றும் 2022.02.08 ஆம் திகதிய கடிதம் சம்பந்தமாக இதுவரை எதுவிதமான பதிலும் அளிக்கப்படாமை தொடர்பில் அவர்களுக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மற்றும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், அத் திகதிகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3268/2023

கௌரவ எம். எஸ். தௌபீக்,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வக்பு பிரிவானது முஸ்லிம் பள்ளிவாசல்கள், தக்கியாக்கள், ஸாவியாக்கள் மற்றும் தர்காக்கள் உட்பட அறக்கொடை நிறுவனங்களுக்குச் சொந்தமான அசையும் மற்றும் அசையாச் சொத்துக்கள் தொடர்பான தரவுத் தளமொன்றைப் பேணிச் செல்லாமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) அவ்வாறு தரவுத் தளமொன்றை பேணிச் செல்லாமை காரணமாக மேற்படி நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்கள், தனிப்பட்ட சொத்துக்களாகப் பயன்படுத்துதல் மற்றும் வக்பு சபைக்குத் தெரியாமல் மேற்படி சொத்துக்களை அதிக விலைக்கு விற்பனை செய்தல் போன்ற ஊழல்களும் முறைகேடுகளும் இடம்பெறுகின்றன என்பதை அறிவாரா என்பதையும்;

(iii) மேற்படி ஊழல்களையும் முறைகேடுகளையும் தடுப்பதற்கான ஆரம்பக் கட்ட நடவடிக்கையாக மேற்குறித்த சொத்துக்கள் தொடர்பில் முறையான தரவுத் தளமொன்றை அமைப்பதற்கு துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2023 யூன் 06, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1459/2023

கௌரவ மாயாதுன்ன சிந்தக அமல்,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) புத்தளம் மாவட்டத்தில் —

(i) மரமுந்திரிகைச் செய்கை மேற்கொள்ளப்படும் காணிகளின் அளவு யாதென்பதையும்;

(ii) வருடாந்த மரமுந்திரிகை உற்பத்தியளவு யாதென்பதையும்;

(iii) மரமுந்திரிகைச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் மரமுந்திரிகைச் செடிகளும் நிவாரணங்களும் வழங்கப்படுகின்றனவா என்பதையும்;

(iv) மரமுந்திரிகைச் செய்கையை விரிவுபடுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1503/2023

கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன,— வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) பின்னவல மிருகக்காட்சிசாலையின் அபிவிருத்திப் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றனவா என்பதையும்;

(ii) மேற்படி அபிவிருத்திப் பணிகள் நிறைவு செய்யப்படவுள்ள திகதி யாதென்பதையும்;

(iii) உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு மேற்படி மிருகக்காட்சிசாலையை பார்வையிடுவதற்குத் தேவையான அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) மேற்படி மிருகக்காட்சிசாலைக்கு எதிர்காலத்தில் சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதற்காக வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், அது பற்றிய விபரங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1542/2023

கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ,— நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரையில் இளம்பராய குற்றவாளிகளுக்கான சீர்திருத்த பயிற்சிப் பாடசாலையில் பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) பயிற்சி நிறைவின் பின்னர் மேற்படி பயிற்சிக்குரியதான தொழில்களில் ஈடுபடும் தரப்பினரின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) பயிற்சியை நிறைவு செய்த இளம்பராய குற்றவாளிகள் தொடர்பில் பின்னாய்வு மேற்கொள்ளப்படுகின்றதா என்பதையும்;

(iv) அவர்களை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளில் ஈடுபடுத்துவதற்கான வேலைத்திட்டம் ஏதும் உள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1578/2023

கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் பல்வேறு பகுதிகளில் தற்போது மனிதப் படுகொலைகள் உள்ளிட்ட பாரதூரமான குற்றச்செயல்கள் இடம்பெற்று வருகின்றன என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு இலங்கை பொலிசாரிடம் முறையான வேலைத்திட்டம் உள்ளதா என்பதையும்;

(iii) இலங்கையில் அடிக்கடி மேற்கொள்ளப்படும் வீட்டுக் கொள்ளைகள் தொடர்பான புலனாய்வுகள் உடனடியாக மேற்கொள்ளப்படுவதில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(iv) ஏற்கனவே காணப்பட்ட பாதுகாப்புக் குழுக்களை செயல் முனைப்புடன் பேணிச்செல்ல முறையான வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுமா என்பதையும்;

(v) சடுதியாக வியாபித்து வரும் பாதாள உலகக் குழுக்களின் செயற்பாடுகளையும் அவை சார்ந்ததாக இடம்பெறும் கொலைகளையும் தடுப்பதற்கு துரித வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1616/2023

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 1996 ஆம் ஆண்டு 947/13 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகை மூலம் சரணாலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள முத்துராஜவல சரணாலயத்தின் எல்லைகள் இதுவரையிலும் அடையாளமிடப்படவில்லையெனில் அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்குறிப்பிட்ட சரணாலயத்திற்குள் உள்ள அரச மற்றும் தனியார் காணிகளின் அளவினை தனித்தனியே இனங்காண்பதற்கு இதுவரையிலும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லையெனில் அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அரச வரைபடங்களுக்கு அமைவாக இனங்காணப்பட்டுள்ள மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் இனங்காணப்பட்டுள்ள மேற்குறிப்பிட்ட சரணாலயத்திற்குச் சொந்தமான காணிகளின் அளவானது ஹெக்டேர்களில் தனித் தனியே யாதென்பதையும்;

(ii) அரச வரைபடங்களுக்கு அமைவாக இனங்காணப்பட்டுள்ள மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் இனங்காணப்பட்டுள்ள காணிகளின் அளவுகளுக்கு இடையில் வேறுபாடு காணப்படுவதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1637/2023

கௌரவ மிலான் ஜயதிலக,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த காலப்பகுதியில் விவசாயிகள் அதிகளவில் மஞ்சள் செய்கையை மேற்கொண்டனர் என்பதையும்;

(ii) அம்மஞ்சள் அறுவடையானது பலசரக்குத் தூள் மற்றும் அது சார்ந்தப் பொருட்கள் சந்தைப்படுத்தல் சபையினால் கொள்வனவு செய்யப்பட்டது என்பதையும்;

(iii) தற்போது மஞ்சள் விலை குறைவடைந்துள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இந்தியாவிலிருந்து மஞ்சள் இறக்குமதி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) மஞ்சள் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளை ஊக்கப்படுத்துவதற்காக அவர்களது அறுவடையை நியாயமான விலையில் கொள்வனவு செய்வதற்குரிய வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1676/2023

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முல்லைத்தீவு மாவட்டத்தில், கரைதுறைபற்று பிரதேச செயலாளர் பிரிவில், கொக்குத்தொடுவாயிலிருந்து திருகோணமலை மாவட்டத்தின் தென்னைமரவாடி வரை செல்லும் சுமார் 15 கிலோ மீற்றர் கொண்ட விவசாய பயன்பாட்டு வீதியொன்று உள்ளது என்பதையும்;

(ii) குறித்த வீதி இன்றளவில் விவசாயிகளால் பயன்படுத்த முடியாத அளவுக்கு சேதமடைந்துள்ளது என்பதையும்;

(iii) குறித்த வீதியின் இருமருங்களிலும் காணப்படுகின்ற வயல்களின் அறுவடையை சந்தைப்படுத்துவதற்கு விவசாயிகள் பயன்படுத்தும் ஒரே வீதி மேற்படி வீதி என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) குறித்த வீதியை விவசாயிகள் பயன்படுத்தக்கூடிய வகையில் சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1757/2023

கௌரவ சமன்பிரிய ஹேரத்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ள நபர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மாகாணத்தின் பிரகாரம் வெவ்வேறாக யாது;

(ii) போசாக்கின்மையைக் கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1799/2023

கௌரவ குமாரசிறி ரத்நாயக்க,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மொனராகலை மாவட்டத்தில் பெருமளவில் கறவை மாடு வளர்ப்பு மேற்கொள்ளப்படுகின்றதென்பதையும்;

(ii) கறவை மாடுகளுக்கு உணவைப் பெற்றுக்கொள்வதில் பால் பண்ணையாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதோடு வனப் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் வன சீவராசிகள் உத்தியோகத்தர்களுடன் அடிக்கடி மோதல்களும் ஏற்படுகின்றன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், கறவை மாடுகளின் உணவுக்குப் பொருத்தமான மேய்ச்சல் தரைகளை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1808/2023

கௌரவ அஜித் மான்னப்பெரும,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கம்பஹா மாவட்டத்தின், கொட்டதெனியாவ கிராமத்தை மையமாகக் கொண்டு கடந்த சில ஆண்டுகளாக பல்வேறு குற்றச் செயல்கள் இடம்பெற்று வருகின்றதென்பதையும்;

(ii) இக்கிராமத்தில் பல்வேறு குற்றச் செயல்கள் தற்போது இடம்பெறுவதால் அங்கு வசிக்கும் மக்கள் பீதியடைந்துள்ளனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) இந்த நிலைமையினைக் கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2023 யூன் 07, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2531/2023

கௌரவ இம்ரான் மஹ்ரூப்,— வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திருகோணமலை மாவட்டத்தில் யானை - மனித மோதல் நிலவுகின்ற பிரதேச செயலகப் பிரிவுகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி பிரதேச செயலகப் பிரிவுகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி பிரதேச செயலகப் பிரிவுகளில் யானை வேலிகள் அமைக்கப்பட்டுள்ள பிரதேசங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி அமைக்கப்பட்ட யானை வேலிகளின் மொத்த நீளம் எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிடப்பட்ட பிரதேச செயலகப் பிரிவுகளில் யானை வேலிகள் அமைக்கப்படாதுள்ள பிரதேசங்கள் யாவை என்பதையும்;

(ii) அப்பிரதேசங்களில் யானை வேலிகளை அமைப்பதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) இன்றளவில் அமைக்கப்பட்டுள்ள யானை வேலிகளை மேலும் நீடிப்பதற்காக மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2574/2023

கௌரவ டீ. வீரசிங்க,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் இலங்கையிலுள்ள கறவைப் பசுக்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இலங்கையின் வருடாந்த திரவப்பால் தேவை எவ்வளவென்பதையும்;

(iii) கறவைப் பசுக்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள மேய்ச்சல் தரைகளின் பரப்பளவு எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி மேய்ச்சல் தரைகள் அமைந்துள்ள பிரதேசங்கள் யாவை என்பதையும்;

(v) இலங்கையின் திரவப்பால் தேவையைப் பூர்த்திசெய்வதற்காக கறவைப் பசுக்களை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2621/2023

கௌரவ சட்டத்தரணி மதுர விதானகே,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் தேசிய அனர்த்த முகாமைத்துவ பேரவையில் ஏதேனும் முறைகேடு, முறையற்ற நியமனம், ஊழல் செயற்பாடு அல்லது சட்டவிரோத செயற்பாடு இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு செயற்பாட்டின் விளைவாகவும் அரசாங்கம் இழந்துள்ள நிதி, சொத்து மற்றும் மனித வளங்களின் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி (அ)(i) இல் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளுக்குப் பொறுப்புக் கூறவேண்டிய அலுவலர்களை அடையாளம் காண்பதற்கென புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் அடையாளம் காணப்பட்டிருப்பின், அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிடின், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) அவர்களுக்கு எதிராக எதிர்காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(v) எதிர்காலத்தில் இடம்பெறக்கூடிய இத்தகைய செயற்பாடுகளைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2690/2023

கௌரவ கே.பி.எஸ். குமாரசிறி,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தரத்தில் உயர்ந்த விதைகளைப் பெற்றுக்கொள்வதானது விவசாயத்துறையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினையாகும் என்பதையும்;

(ii) சந்தையில் அதிக விலைக்கு விதைகள் விற்பனை செய்யப்படுகின்றன என்பதையும்;

(iii) மேற்படி விதைகள் தரமற்றவை என்பதையும்;

(iv) அதன் காரணமாக விவசாயிகள் பாரிய அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) விவசாயிகளுக்கு தரத்தில் உயர்ந்த விதைகளை வழங்குவதற்காக இன்றளவில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வேலைத்திட்டம் யாதென்பதையும்;

(ii) விவசாயிகளுக்குத் தேவையான விதைகளை அரசாங்கத்தின் அனுசரணையின் கீழ் வழங்குவதற்கான வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுமா என்பதையும்;

(iii) விதைகளுக்கான கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iv) இலங்கைக்குத் தேவையான விதைகளை நாட்டுக்குள்ளேயே உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு குறைந்த விலையில் வழங்குவதற்கான வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுமா என்பதையும்;

(v) கமநல சேவை நிலையங்களை, பிரதேச விதைக் களஞ்சியசாலைகளாக மேம்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2842/2023

கௌரவ யூ.கே. சுமித் உடுகும்புர,— கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் கொல்லர் பட்டறை கைத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களின் வாழ்க்கைத் தரத்தைக் கட்டியெழுப்புவதற்கு இன்றளவில் மேற்கொள்ளப் பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) இவர்கள் பாரிய சிரமங்களுக்கு மத்தியில் கைத்தொழிலை நடத்திவருவதுடன் பல்வகையான உற்பத்திகளையும் மேற்கொண்டு வருகின்றனர் என்பதையும்;

(iii) கொல்லர் பட்டறைகளில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை உள்நாட்டு சந்தையில் ஊக்குவிப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) இறக்குமதி செய்யப்படும் விவசாய உபகரணங்களை அதைரியப்படுத்துவதன் ஊடாக கொல்லர் பட்டறை கைத்தொழிலை பாதுகாக்க முடியுமென்பதை அறிவாரா என்பதையும்;

(v) ஆமெனின், இதற்கென மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2932/2023

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் பொலிஸ் அலகு தாபிக்கப்பட்ட திகதி மற்றும் அகற்றப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி அலகு அகற்றப்படுவதற்கு ஏதுவாக அமைந்த காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) வெளிநாட்டு வேலை வாய்ப்புத் துறையில் இலஞ்சம், ஊழல் மற்றும் மோசடிகள் அதிகரித்துள்ள பின்னணியில் மேற்குறிப்பிட்ட பொலிஸ் அலகு அகற்றப்பட்டமையானது சட்டரீதியான மற்றும் தர்க்க ரீதியான அடிப்படையின்றி மேற்கொள்ளப்பட்ட ஒரு தீர்மானம் என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அப்பொலிஸ் அலகினை மீண்டும் தாபிக்க மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2969/2023

கௌரவ ஹேஷா விதானகே,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2018 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட பிளாஸ்ரிக்கின் அளவு யாதென்பதையும்;

(ii) அதற்காக செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(iii) இலங்கைக்கு பிளாஸ்ரிக் இறக்குமதி செய்யப்படுவதை மட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3074/2023

கௌரவ அஸோக அபேசிங்ஹ,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கை புகையிரதத் திணைக்களத்தில் —

(i) பணியாற்றும் மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பதவியின் அடிப்படையில் தனித்தனியாக எத்தனை என்பதையும்;

(ii) நிரந்தர மற்றும் ஒப்பந்த/அமய அடிப்படையில் பணியாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை தனித்தனியாக எத்தனை என்பதையும்;

(iii) இன்றளவில் ஒப்பந்த /அமய அடிப்படையில் பணியாற்றும் ஊழியர்களை நிரந்தரமாக்குவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2023 யூன் 08, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

3/2023

கௌரவ சமிந்த விஜேசிறி,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) திரு. அர்ஜுன் மகேந்திரன் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராகப் பணியாற்றிய காலப்பகுதி யாதென்பதையும்;

(ii) மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் இலங்கை மத்திய வங்கியில் பிணை முறி மோசடியொன்று இடம்பெற்றதென்பதை ஏற்றுக்கொள்கின்றாரா என்பதையும்;

(iii) மேற்படி பிணை முறி மோசடியுடன் திரு. அர்ஜுன் மகேந்திரன் நேரடியாக தொடர்புபட்டுள்ளதாக அது தொடர்பில் நியமிக்கப்பட்ட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவினால் குற்றஞ்சாட்டப்பட்டதென்பதை அறிவாரா என்பதையும்;

(iv) திரு. அர்ஜுன் மகேந்திரனை இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் பதவிக்கு நியமிப்பதற்கு விதப்புரை செய்த மற்றும் மேற்படி நியமனத்தை அங்கீகரித்த அரசியல் அதிகாரத் தரப்பு ஆட்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

383/2023

கௌரவ சட்டத்தரணி வசந்த யாப்பாபண்டார,— தொழில்நுட்ப அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பல்வேறு தொலைபேசி நிறுவனங்களுக்குரிய சிம்அட்டைகள் அரசாங்கத்தின் முறையான ஒழுங்குபடுத்தலின்றி பிரதான நகரங்களின் நடைபாதைகளில் விற்பனை செய்யப்படுகின்றன என்பதையும்;

(ii) மேற்படி சிம்அட்டைகளை மோசடியாக பாரிய அளவில் கொள்வனவு செய்கின்ற நபர்களினால் அவை தவறாக பயன்படுத்தப்பட்டு பல்வேறான முறைகேடுகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதையும்;

(iii) இணையத்தளத்தினூடாக பொருட்களை வழங்குவதாக உறுதியளித்து வங்கிக் கணக்குகளில் பணத்தை வரவு வைத்து மோசடி செய்யும் தீத்தொழில் இடம்பெறுகின்றது என்பதையும்;

(iv) கண்டி, இரத்தினபுரி, பிலியந்தலை, பதுளை மற்றும் கொழும்பு உட்பட பெரும்பாலான பிரதேசங்களைச் சேர்ந்த இளைஞர்கள் இன்றளவில் மேற்படி தீத்தொழிலுக்கு இரையாகியுள்ளனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், மேற்படி மோசடிகளைத் தடுப்பதற்கு இன்றளவில் மேற்கொள்ளப் பட்டுள்ள நடவடிக்கைகளும் எதிர்காலத்தில் மேற்கொள்ள எதிர்பார்க்கப்படும் நடவடிக்கைகளும் வெவ்வேறாக யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3090/2023

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன,— நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வெளிநாட்டு உதவிகளின் மீது கண்டி, காலி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய நகரங்களின் அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட திகதிகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு நகரத்தையும் அபிவிருத்தி செய்வதற்காக உதவி வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்த சர்வதேச அமைப்புகள் யாவை என்பதையும்;

(iii) மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு நகரத்தையும் அபிவிருத்தி செய்வதற்காக வழங்கப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு நகரத்தினதும் அபிவிருத்திப் பணிகள் நிறைவு செய்யப்படவிருந்த திகதி யாதென்பதையும்;

வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி நகர அபிவிருத்திக் கருத்திட்டம் தாமதமடைவதற்கு ஏதுவாக அமைந்த காரணிகள் யாவை என்பதையும்;

(ii) அக்கருத்திட்டம் தாமதமடைந்ததன் காரணமாக இழக்கப்பட்ட உதவித் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) உலக வங்கியின் உதவித் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் கருத்திட்டங்களை உரிய காலப்பகுதியில் நடைமுறைப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3100/2023

கௌரவ லலித் வர்ணகுமார,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டின் பின்னர் தேசிய சேமிப்பு வங்கியில் பதவியுயர்வுகள் வழங்கப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி பதவியுயர்வுகள் வழங்கப்படும்போது பின்பற்றப்பட்ட முறையியல் யாதென்பதையும்;

(iii) பதவியுயர்வுகள் வழங்கப்படும்போது, தேசிய சேமிப்பு வங்கியின் தலைமையகக் கிளையில் பணியாற்றிய ஊழியர்கள் தொடர்பில் விசேட ஆதரவு காட்டப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) முகாமையாளர்களுக்கு பதவியுயர்வுகள் வழங்கப்படும்போது, அவர்கள் முன்னர் பணியாற்றிய கிளைகளில் அதிக முன்னேற்றம் காட்டியுள்ளமை கவனத்தில் கொள்ளப்பட்டதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3103/2022

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பதில் கடமையாற்றுதல் அடிப்படையில் நாடெங்கிலும் அமைந்துள்ள பாடசாலைகளில் பணியாற்றுகின்ற அதிபர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அவர்கள் மத்தியில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பணியாற்றுகின்ற அதிபர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பதில் கடமையாற்றுதல் அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ள அதிபர்களுக்கு சம்பள அதிகரிப்புகள், பதவி உயர்வுகள் மற்றும் இடமாற்றங்கள் வழங்கப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி அதிபர்களுக்கு சம்பள அதிகரிப்புகள், பதவி உயர்வுகள் மற்றும் இடமாற்றங்கள் வழங்கப்படும் திகதி யாதென்பதையும்;

(iii) பொதுச் செயன்முறையின் கீழ் பதில் கடமையாற்றும் அடிப்படையில் பணியாற்றுகின்ற அதிபர்கள் நிரந்தரச் சேவைக்குள் உள்ளீர்க்கப்படுகின்ற போதிலும் தற்பொழுது இவர்களை நிரந்தரச் சேவைக்குள் உள்ளீர்க்கப் படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி அதிபர்களை நிரந்தரச் சேவைக்குள் உள்ளீர்க்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3154/2023

கௌரவ தவராஜா கலை அரசன்,— நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த கால மோதல்களின்போது கடுமையாக பாதிக்கப்பட்ட அம்பாறை மாவட்டத்தின் திருக்கோவில் பிரதேச செயலகப் பிரிவின், கஞ்சிகுடிச்சாறு, தங்கவேலாயுதபுரம், சாகாமம் மற்றும் காஞ்சிரங்குடா போன்ற கிராமங்களில் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் இதுவரை நிறைவு செய்யப்படவில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மோதல்கள் நிறைவு பெற்றதையடுத்து மேற்குறிப்பிட்ட கிராமங்களைச் சேர்ந்த மக்களை மீளக் குடியேற்றுவதற்கு மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி கிராமங்களில் இதுவரை நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) நிர்மாணிக்கப்படவுள்ள வீடுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(v) 2023 ஆம் ஆண்டு நிறைவடைவதற்கு முன்னதாக மேற்குறிப்பிட்ட கிராம மக்களை மீள்குடியேற்றுவதற்கான நடவடிக்கைகளை நிறைவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3170/2023

கௌரவ தயாசிறி ஜயசேக்கர,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பாடசாலை தவணைப் பரீட்சை வினாத்தாள்கள் மற்றும் ஒப்படைகள் போன்றவற்றை அச்சிடுவதற்கான செலவினங்கள் தற்போது பெற்றோரிடமிருந்து அறவிடப்படுகின்றன என்பதையும்;

(ii) தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக இந்த செலவினங்களைத் தாங்கிக்கொள்வது பெற்றோருக்கு கடினமாக உள்ளது என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) அரசியலமைப்பின் பிரகாரம் சகல ஆட்களுக்கும் கல்வியில் சமத்துவமான மற்றும் சமமான வாய்ப்புகளைப் பெறுவதற்கான உரிமை மேற்படி அறவீடு காரணமாக மீறப்படுகின்றதா என்பதையும்;

(ii) அச்சு நடவடிக்கைகளுக்கான செலவினத்தை பெற்றோரிடமிருந்து அறவிடுவதைத் தவிர வேறு தீர்வு அதிபர்கள் மற்றும் கல்வி அலுவலர்களுக்கு இல்லையென்பதை அறிவாரா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி அறவீடுகள் தொடர்பில் அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கை யாது என்பதையும்;

(iv) இந்த நிலைமை காரணமாக, பாடசாலை பாடப் புத்தகங்கள் வழங்கப்படுவதை மட்டுப்படுத்துவதற்கு அல்லது நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3228/2023

கௌரவ நிரோஷன் பெரேரா,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) 2023 ஆம் ஆண்டில் புத்தளம் மாவட்டத்தின் கொஸ்வத்த பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக பொதுமக்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளனவா;

(ii) ஆமெனில், அவ்வாறு எதிராக முறைபாடுகள் கிடைக்கப்பெற்றுள்ள ஒவ்வொரு பொலிஸ் உத்தியோகத்தரினதும் பெயர் மற்றும் பதவி என்பன வெவ்வேறாக யாவை;

(iii) மேற்படி முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா;

(iv) மேற்படி முறைப்பாடுகள் தொடர்பில் இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

3265/2023

கௌரவ எம்.எஸ்.தௌபீக்,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை, மாலிம்பட பொலிஸ் ஆளுகைப் பிரதேசத்தில், தெலிஜ்ஜவில, சொறகொட கிராமத்தில் அமைந்துள்ள மயானத்தில் அடக்கம் செய்யப்பட்ட முஸ்லீம்களின் சடலங்களை ஒழுங்கமைந்த கும்பலொன்று தோண்டி எடுத்துச் செல்வது தொடர்பில் மாலிம்பட பொலிஸ் நிலையம் அறிந்துள்ளதா என்பதையும்;

(ii) அது தொடர்பில் 2020.06.16 ஆம் திகதி C.I.B. (2) 332/125 ஆம் இலக்கத்தின் கீழ் மாலிம்பட பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாடு சம்பந்தமாக முறையான விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனின், இன்றளவில் அவ்விசாரணையின் முன்னேற்றம் யாதென்பதையும்;

(iv) மேற்படி மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டுள்ள முஸ்லீம்களின் சடலங்கள் காணாமல் போவதை தடுப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3276/2023

கௌரவ லலித் எல்லாவல,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ருவன்புர அதிவேக நெடுஞ்சாலையை அமைப்பதற்காக இன்றளவில் சகல காணிகளும் சுவீகரிக்கப்பட்டுள்ளன என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அக்காணி உரிமையாளர்களுக்கு நட்டஈடு செலுத்தும் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) செலுத்தப்பட்ட மொத்த நட்டஈட்டுத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) இதுவரை நட்டஈடு செலுத்தப்படவில்லை எனின், நட்டஈடு செலுத்தப்படும் திகதி யாது என்பதையும்;

(v) சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்குரிய நட்டஈட்டுத் தொகையை கணிப்பிடும்போது அரசாங்கத்தின் மதிப்பீட்டுப் பெறுமதியானது அக்காணிகளின் தற்போதைய சந்தைப் பெறுமதியை விட பாரியளவில் குறைந்திருப்பதன் காரணமாக மேற்படி காணி உரிமையாளர்களுக்கு பாரிய அநீதி இழைக்கப்படுவதால் அக்காணிகளை தற்போதைய சந்தைப் பெறுமதிக்கு ஏற்ப மீண்டும் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(vi) ஆமெனில், அத்திகதி யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) குறித்த காணியின் ஒரு பகுதி மாத்திரம் சுவீகரிக்கப்படும் சந்தர்ப்பத்தில் எஞ்சிய காணித் துண்டின் எல்லைகளை அடையாளமிட்டு காணி உரிமையாளர்களுக்கு வழங்குவதற்கான வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வேலைத்திட்டம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2023 யூன் 09, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

420/2023

கௌரவ கயந்த கருணாதிலக்க,— தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையில் வேலைவாய்ப்புக்காக வெளிநாடுகளுக்குச் சென்ற இலங்கையர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி காலப்பகுதியில் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்காக இலங்கையர்களை அனுப்புவதற்கு புதிதாக அடையாளங் காணப்பட்ட நாடுகள் யாவை என்பதையும்;

(iii) மேற்குறிப்பிட்ட நாடுகளில் வேலைவாய்ப்புகளுக்காக அனுப்பப்பட்ட இலங்கையர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையில் வெளிநாடுகளில் பணிபுரிந்த இலங்கையர்களினால் இலங்கைக்கு ஈட்டிக்கொடுக்கப்பட்ட அந்நியச் செலாவணி ஆண்டு வாரியாக தனித்தனியே எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 6 ஆண்டுகளுக்கு மேல் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளில் ஈடுபட்டுள்ள இலங்கையர்களுக்காக முன்மொழியப்பட்டுள்ள பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் தற்சமயம் நடைமுறையில் உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) மேற்படி ஓய்வூதியத் திட்டத்தின் மூலம் பயனடையும் நபர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

474/2023

கௌரவ புத்திக பத்திறண,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் தொழிற்படும் வாடகை வாகனங்கள் மற்றும் அது சார்ந்த சேவைகளை வழங்கும் வெளிநாட்டுக் கம்பெனிகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) 2017.01.01 ஆம் திகதி தொடக்கம் 2021.12.31 ஆம் திகதி வரை மேற்படி கம்பெனி ஒவ்வொன்றினாலும் ஈட்டப்பட்ட வருமானம், ஒவ்வோராண்டு வாரியாக வெவ்வேறாக எத்தனை ரூபாய் என்பதையும்;

(iii) மேற்கூறிய காலப்பகுதியில் அத்தகைய கம்பெனி ஒவ்வொன்றினாலும் செலுத்தப்பட்ட வரிப் பணம் ஒவ்வோராண்டு வாரியாக வெவ்வேறாக எத்தனை ரூபாய் என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) (i) வாடகை வாகனகள் மற்றும் அது சார்ந்த சேவைகளை வழங்க வெளிநாட்டுக் கம்பெனிகள் இணைந்துள்ளதன் காரணமாக, இலங்கையில் அந்தச் சேவைகளை வழங்கும் நபர்களும் கம்பெனிகளும் சிரமத்திற்கு உள்ளாகியிருப்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) இலங்கையில் தொழிற்படும் வாடகை வாகன சேவையை ஒழுங்குறுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், அந்த நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

689/2023

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிகுடி பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள களுதாவளை பிரதேச வைத்தியசாலைக்கு நிரந்தர மருத்துவரொருவர் நியமிக்கப்படவில்லை என்பதையும்;

(ii) அக் காரணத்தினால் பிரதேச மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட வைத்தியசாலைக்கு நிரந்தர மருத்துவரொருவர் இதுவரை நியமிக்கப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி வைத்தியசாலைக்கு மருந்தாளரொருவர் நியமிக்கப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்குறிப்பிட்ட வைத்தியசாலையில் இன்றளவில் நிலவுகின்ற வெற்றிடங்கள் எப்போது நிரப்பப்படும் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) ஆரம்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்திலிருந்து இதுவரை இவ்வைத்தியசாலையில் எவ்வித புனரமைப்புப் பணிகளும் மேற்கொள்ளப்படவில்லை என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்குறிப்பிட்ட வைத்தியசாலையை புனரமைப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

816/2023

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2022.05.09 ஆம் திகதி இலங்கையில் நடந்த கலவரச் சம்பவத்தின்போது, தமது கடமைகளைத் தவறவிட்டிருந்த பொலிஸ் அலுவலர்களின் எண்ணிக்கை, ஒவ்வொரு பதவி வாரியாக தனித் தனியாக யாது என்பதையும்;

(ii) அந்த அலுவலர்களுக்கு எதிராக எடுக்கப்படவிருக்கும் நடவடிக்கை யாது என்பதையும்;

(iii) மேற்படி திகதியிலும் அதனை அண்மித்த சில மாதங்களிலும், பிரதிப் பொலிஸ் பதிசோதகர் தலைமையதிபதி ஒருவர் உட்பட சில பொலிசு அலுவலர்களை பகிரங்கமாக துன்புறுத்தியும், கடமைகளுக்கு இடையூறு விளைவித்தும் ஆவேசத்துடன் செயற்பட்ட நபர்கள் இருப்பதை அறிவாரா என்பதையும்;

(iv) இன்றளவில் அந்நபர்கள் இனங்காணப்பட்டுள்ளனரா என்பதையும்;

(v) அவ்வாறாயின், இவர்களுக்கு எதிராக சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2022.05.09 ஆம் திகதி நடந்த கலவரச் சம்பவத்தின்போது, பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டிருப்பதை அறிவாரா என்பதையும்;

(ii) அந்தப் படுகொலையுடன் சம்பந்தப்பட்ட நபர்கள் இனங்காணப்பட்டுள்ளனரா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், அந்நபர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) இவர்களுக்கு எதிராக சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

834/2023

கௌரவ சட்டத்தரணி பிரேம்நாத் சி. தொலவத்த,— பிரதம அமைச்சர் மற்றும் பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தற்போது காணப்படும் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுக்களின் எண்ணிக்கை மற்றும் இராஜாங்க அமைச்சுக்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாவை;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை;

(iii) மேற்குறிப்பிட்ட அமைச்சுக்களில், தனியார் கட்டிடங்களில் தமது அமைச்சு அலுவலகங்களைப் பேணி வரும் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுக்கள் மற்றும் இராஜாங்க அமைச்சுக்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(iv) அவற்றின் பெயர்கள் யாவை;

(v) மேற்படி ஒவ்வொரு அலுவலகத்திற்கும் செலுத்தப்படும் மாதாந்த வாடகை வெவ்வேறாக எவ்வளவு;

(vi) தனியார் கட்டிடங்களில் பேணிவரப்படும் அமைச்சு அலுவலகங்களை அரசாங்கக் கட்டிடங்களுக்கு கொண்டு செல்வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

850/2023

கௌரவ காமினி வலேபொட,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களின் நிமித்தம் இலங்கைக்கு கிடைக்கவேண்டிய அந்நியச் செலாவணியில் கணிசமான பகுதி இலங்கைக்கு அனுப்பப்படாமல் வெளிநாடுகளில் தடுத்து வைக்கப்படுவதை அறிவாரா என்பதையும்;

(ii) அவ்வாறு தடுத்து வைக்கப்படும் அந்நியச் செலாவணித் தொகையை அடையாளம் காண்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) உள்ளக அந்நியச் செலாவணி மோசடிகளைத் தடுத்தல், அவற்றை வெளிப் படுத்திக்கொள்ளல் மற்றும் அதனுடன் தொடர்புடைய தவறாளிகளுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளல் என்பவற்றுக்காக இலங்கையில் காணப்படும் சட்டங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்குறிப்பிட்டவாறான அந்நியச் செலாவணி மோசடிகளைத் தடுப்பதற்காக அந்நியச் செலாவணி சட்டத்தில் தேவையான திருத்தங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

859/2023

கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கொவிட்-19 காரணமாக இறந்த உடல்களின் தகனம் தொடர்பாக 'நிபுணர்களின் குழு' ஒன்றினால் சுகாதார அமைச்சு அதன் கொள்கை தொடர்பாக பிழையாக வழிகாட்டப்பட்டதாக 2022.11.29 ஆம் திகதி சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சரினால் மேற்கொள்ளப்பட்ட கூற்றை அவர் ஏற்றுக்கொள்கின்றாரா என்பதையும்;

(ii) மேலே குறிப்பிடப்பட்ட குழு அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட குழுவா என்பதையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) மேலே சொல்லப்பட்ட குழு அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட குழுவாயின் —

(i) விசேடமாக கொவிட்-19 காரணமாக இறந்தவர்களின் உடல்களை அகற்றுதல் பற்றிய அதன் விதப்புரைகளையும்;

(ii) நியமன அதிகாரியையும்;

(iii) விசாரணை நியதிகள் அத்துடன்/அல்லது ஆணையையும்;

(iv) உறுப்பினர்களின் பெயர்களையும் அவர்களின் பதவிகளையும்;

(v) தவிசாளரின் பெயரையும்;

(vi) அது தொடர்ச்சியாக கூடுகின்றதா என்பதையும்;

(vii) இன்றேல், அது கடைசியாக கூடிய திகதியையும்;

(viii) இற்றை வரை நடைபெற்ற கூட்டங்களின் எண்ணிக்கையையும்;

(ix) கூட்டங்கள் நடைபெற்ற இடத்தையும்;

(x) ஒவ்வொரு கூட்டத்திலும் தலைமை வகித்த தனிப்பட்ட ஆட்களின் பெயர்களை வெவ்வேறாகவும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

867/2023

கௌரவ ரோஹண பண்டார,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனுராதபுரம் மாவட்டத்தில் வன்னி பலுகொல்லேவ கிராமத்தில் சோளம் பயிரிடப்பட்டுள்ள நிலத்தின் பரப்பளவு எவ்வளவு என்பதையும்;

(ii) புதிய வகை வைரஸ் காரணமாக சோளப் பயிர்ச்செய்கை அழிவடைந்துள்ளமையை அறிவாரா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி கிராமத்தில் சோளப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1305/2023

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) "சிசு செரிய" நிகழ்ச்சித் திட்டத்திற்கு உட்பட்டதாக பொலன்னறுவை மாவட்டத்தில் தற்போது ஓட்டத்தில் விடப்பட்டுள்ள பேருந்துகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) அத்தகைய பேருந்து ஒவ்வொன்றும் ஓட்டத்தில் விடப்பட்டுள்ள பயண வீதி தனித் தனியாக யாது என்பதையும்;

(iii) "சிசு செரிய" நிகழ்ச்சித் திட்டத்தை மேலும் பொலனறுவை மாவட்டம் பூராகவும் விஸ்தரிப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1713/2023

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது இலங்கை நீதிமன்ற முறைமையில் விசாரிக்கப்பட்டு வருகின்ற போதைப்பொருள் சம்பந்தமான வழக்குகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) போதைப்பொருள் சம்பந்தமான வழக்குகளின் சாட்சியாளர்களாக இருந்து 2020.01.01 ஆம் திகதி முதல் இது வரையான காலப்பகுதியில் வீதிகளில் படுகொலை செய்யப்பட்டுள்ள ஆட்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) மேற்படி படுகொலைகள் காரணமாக நிராயுதபாணிகளான அப்பாவி பொதுமக்கள் அச்சமடைந்துள்ளனர் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி படுகொலைகள் இடம்பெறுவதைக் கட்டுப்படுத்த அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

பா. 2/2023

கௌரவ சமிந்த விஜேசிறி,— சகல அரச நிறுவனங்களையும் அரசுக்குச் சொந்தமான கட்டடங்களில் நிலையப்படுத்தல்,— பொது மக்களின் வரிப் பணத்தில் பேணப்படுகின்ற அரச நிறுவனங்களை தனியார் கட்டடங்களில் நிலையப்படுத்துவதன் மூலம் பெருந்தொகை பணம் வீணாக செலவாவதாலும், மேற்படி நிறுவனங்களை அரச கட்டடங்களில் நிலையப்படுத்துவதன் மூலம் பெருமளவு பணத்தை சேமிக்க முடியுமென்பதாலும், சகல அரச நிறுவனங்களையும் அரசுக்குச் சொந்தமான கட்டடங்களில் மாத்திரம் நிலையப்படுத்துவதற்கு அரசாங்கத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 3/2023

கௌரவ சமிந்த விஜேசிறி,— வீழ்ச்சியடைந்துள்ள நிதி நிறுவனங்களை மீளக் கட்டியெழுப்புதல்,— ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தி மற்றும் நிதிச் சந்தை மீது நிதி நிறுவனங்கள் முக்கிய தாக்கத்தை ஏற்படுத்துகின்ற போதிலும், கடந்த காலம் பூராகவும் இந்நாட்டின் சில நிதி நிறுவனங்கள் வீழ்ச்சியடைந்துள்ளமையினாலும், அதன் வைப்பாளர்கள் பொதுவாகப் பல பிரச்சினைகளுக்கு முகங் கொடுத்துள்ளமையினாலும் குறிப்பிட்ட நிதி நிறுவனங்களை மீள்கட்டியெழுப்புவதற்கு அரசாங்கம் துரித வேலைத்திட்டமொன்றை தயார் செய்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 4/2023

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்நாட்டு டின் மீன் உற்பத்தியை அதிகரித்தல்,— இலங்கையைச் சூழ கடல் காணப்படுகையில், நாட்டுக்குத் தேவையான டின் மீன்களை இறக்குமதி செய்வதற்காக வருடாந்தம் பெருந்தொகை நிதி வெளிநாடுகளுக்குச் செலவிட வேண்டி ஏற்படுவதனால் இந்நிலைமையைத் தவிர்ப்பதற்காக உள்நாட்டு டின் மீன் கைத்தொழிலை மேம்படுத்துவதற்காக துரித வேலைத்திட்டமொன்றை முன்னெடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 5/2023

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்ளூராட்சி நிறுவனங்களினால் கழிவகற்றப்படுதல்,— இலங்கையில் பெரும்பாலான உள்ளூராட்சி நிறுவனங்கள் கழிவுகளை அகற்றும் பொறுப்பினை இன்றளவில் தனியார் கம்பனிகளுக்குக் கையளித்துள்ளமையின் காரணமாக, வரி செலுத்தும் மக்களது பெருந்தொகை நிதி குறிப்பிட்ட கம்பனிகளைச் சென்றடைவதனால், குறித்த பணிகளை குறிப்பிட்ட உள்ளூராட்சி நிறுவன ஊழியர்களை ஈடுபடுத்தி மேற்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 6/2023

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்ளூராட்சி நிறுவனங்களில் பழுதடைந்துள்ள வாகனங்களைத் திருத்துதல்,— பெரும்பாலான உள்ளூராட்சி நிறுவனங்களின் பழுதடைந்த நிலையில் காணப்படும் வாகனங்கள் குவித்து வைக்கப்பட்டுள்ள நிலையானது மிக சாதாரண ஒரு காட்சியாக அமைந்துள்ளதாலும், குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு புதிதாக வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்குப் பதிலாக, இந்த வாகனங்களை திருத்துவதன் மூலம் பெருந்தொகை நிதியை மீதப்படுத்த முடியுமென்பதாலும், உள்ளூராட்சி நிறுவனங்களின் பழுதடைந்துள்ள வாகனங்களைத் திருத்துவதற்கான துரித வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயார் செய்ய வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 7/2023

கௌரவ சமிந்த விஜேசிறி,— வெளிநாட்டில் பணிபுரியும் ஊழியர்களுக்கு நலனோம்புகை வசதிகளை வழங்குதல்,— இலங்கைக்கு ஆகக்கூடிய அந்நியச் செலாவணியை ஈட்டித்தருவதில் பங்களிப்புச் செய்கின்ற வெளிநாட்டில் பணிபுரியும் ஊழியர்களின் குடும்பங்களின் நலனோம்புகைக்காக துரித நிகழ்ச்சித்திட்டமொன்றை ஆரம்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா 8/2023

கௌரவ சமிந்த விஜேசிறி,— தேன் கைத்தொழிலை மேம்படுத்தல்,— மிகத் தரமான மருத்துவ குணமிக்க, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தையில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள தேன் கைத்தொழிலை உள்நாட்டில் மேம்படுத்துவதற்கு துரித வேலைத்திட்டம் ஒன்றை அரசாங்கம் உருவாக்க வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 9/2023

கௌரவ புத்திக பத்திறண,— மன்னன் இராவணன் தொடர்பாக முறைசார்ந்த ஆய்வொன்றை மேற்கொள்ளல்,— மன்னன் இராவணன் தொடர்பாக உறுதியான வரலாற்றுச் சான்றுகள் இல்லாத போதிலும், முறைசார்ந்த ஆய்வொன்றின் மூலம் அவர் தொடர்பாக நாட்டு மக்களின் மனப்பாங்கினை மேம்படுத்துவதற்கும் மன்னன் இராவணனுக்கு இருந்த அறிவினை நாட்டின் அபிவிருத்திக்கு பயன்படுத்துவதற்கும், இலங்கை வரலாற்றில் மறைந்துபோயுள்ள அத்தியாயமொன்றை வெளிக்கொண்டு வருவதற்கும் இயலுமாயுள்ளதால் புத்திஜீவிகள் குழுவொன்றின் மூலம் மன்னன் இராவணன் தொடர்பான ஆய்வொன்று மேற்கொள்ளப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 10/2023

கௌரவ புத்திக பத்திறண,— உள்நாட்டு அரிசி வகைகளின் போசாக்குக் குணம் தொடர்பில் மக்களை விழிப்புணர்வூட்டல்,— தற்போது இலங்கையிலுள்ள சந்தைகளில் கிடைக்கின்ற பழைய உள்நாட்டு அரிசி மற்றும் தற்போது பயன்படுத்தப்படுகின்ற புதிய அரிசி வகைகளின் போசாக்குக் குணம் தொடர்பாகவும், பல்வேறு நோய்களால் பீடிக்கப் பட்டுள்ளவர்கள் நுகர வேண்டிய அரிசி வகைகள் தொடர்பில் மக்களை விழிப்புணர்வூட்டல் மற்றும் விவசாயிகள் அத்தகைய நெல் வகைகளை பயிரிடுவதற்கு வசதிகளை ஏற்படுத்துவது தொடர்பாகவும் அரசாங்கம் தேசிய மட்டத்திலான நிகழ்ச்சித்திட்டமொன்றைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 11/2023

கௌரவ புத்திக பத்திறண,— ஆக்கிரமிப்புச் செடிகள் மற்றும் விலங்குகள் காரணமாக உயிரினப் பல்வகைமைக்கு ஏற்படுகின்ற பாதிப்பினைக் குறைத்தல்,— இலங்கையின் உயிரினப் பல்வகைமைக்கு பாதிப்பு ஏற்படக்கூடிய ஆக்கிரமிப்புச் செடிகள் மற்றும் விலங்குகளை இனங்கண்டு, அவற்றைப் பெயரிடுவதன் மூலம் அத்தகைய செடிகள் மற்றும் விலங்குகள் பெருகச் செய்யப்படுவதையும், இறக்குமதி செய்யப்படுவதையும் தடை செய்து இலங்கையின் சுற்றுச் சூழலைப் பாதுகாக்க அரசாங்கம் இடையீடு செய்து துரிதமாக தேவையான சட்டங்களை உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 12/2023

கௌரவ புத்திக பத்திறண,— பல்கலைக்கழக மற்றும் ஏனைய மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்களின் மாணவர்களால் எழுதப்படுகின்ற ஆய்வுக் கட்டுரைகளை சம்பந்தப்பட்ட அமைச்சுகளின் அபிவிருத்திப் பணிகளை இலக்குவைத்துத் தயாரித்தல்,— இலங்கையில் தற்போதுள்ள பல்கலைக்கழகங்களிலும் ஏனைய மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்களிலும் கல்வி பயிலும் மாணவர்கள்தம் கற்கைநெறிகளுடன் சம்பந்தப்பட்டதாக எழுதுகின்ற ஆராய்ச்சிக் கட்டுரைகளை, இலங்கையின் பொருளாதார, சமூக மற்றும் கலாசார விருத்திக்கு ஏற்புடையதாக எழுதவேண்டியமை முக்கியம்பெறுவதாலும், இக்கட்டுரைகளை மதிப்பீடு செய்யும் விரிவுரையாளர்கள் மற்றும் அத்தகைய ஆராய்ச்சிக் கட்டுரைகளுடன் சம்பந்தப்பட்ட அமைச்சுகளுக்கிடையில் சிறந்த இணைப்பாக்கத்தை ஏற்படுத்துவதற்காக ஒவ்வோர் அமைச்சு மட்டத்திலும் பொறுப்புவாய்ந்த அலுவலர் ஒருவரை நியமிக்கவேண்டி உள்ளதாலும், சம்பந்தப்பட்ட அமைச்சுகளின் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகளைச் செயற்படுத்தும் போது நீண்டகால, நடுத்தரக்கால மற்றும் குறுகிய கால இலக்குகளை அடைந்துகொள்வதன் பொருட்டு அத்தகைய ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் பயன்படுத்த முறையான ஒரு வேலைத்திட்டத்தை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 13/2023

கௌரவ புத்திக பத்திறண,— உலகெங்குமுள்ள பௌத்த வணக்கஸ்தலங்களைப் பாதுகாக்க முன்னணி வகித்தல்,— உலகெங்குமுள்ள பௌத்தர்களின் வழிபாட்டுக்குரிய பௌத்த வணக்கஸ்தலங்களின் பாதுகாப்பை பலப்படுத்துவதற்கும், அனைத்துலக மட்டத்தில் பௌத்தர்கள் சார்பாக குரல் எழுப்பக்கூடிய வலுவான ஓர் அமைப்பை உருவாக்குவதற்குமென உலகெங்குமுள்ள பௌத்த மதத் தலைவர்களையும் அமைப்புகளையும் ஒருங்கிணைக்க, இலங்கை தலைமையேற்பதற்குப் பொருத்தமான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 14/2023

கௌரவ புத்திக பத்திறண,— முதியோர் பராமரிப்புச் சபைகளை நாடுபூராக விஸ்தரித்தல்,— வாழ்க்கையின் அந்திம காலத்தைக் கழித்துக்கொண்டிருக்கும் முதியோர்கள் தம் குடும்ப அங்கத்தவர்களாலும் சில நிறுவனங்களாலும் புறக்கணிக்கப்படுவதன் காரணமாக ஏற்படுகின்ற பல்வேறு அநீதிகள் குறித்து முறைப்பாடு செய்ய, சுகாதார அமைச்சில், முதியோர்களுக்கான தேசிய சபை மற்றும் தேசிய செயலகத்தின் கீழ் இயங்கிவரும் முதியோர் பராமரிப்புச் சபை வேலைத்திட்டத்தை மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச செயலக பிரிவு மட்டத்தில் விஸ்தரிக்கத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 15/2023

கௌரவ புத்திக பத்திறண,— இலங்கையின் உணவுக் கலாசாரத்தினை கற்றல், கற்பித்தல் செயன்முறையுடன் இணைத்தல்,— இலங்கையின் உணவுக் கலையானது, சுவையூட்டிகள் மற்றும் கலத்தல் கலை, சமையல் கலை, நிறமூட்டிக் கலை, உணவு வெட்டும் கலை உள்ளிட்ட பல அம்சங்களைக் கொண்டுள்ளதால், இலங்கையின் உணவுக் கலாசாரம் தொடர்பான கற்பித்தலை கற்பித்தல் செயன்முறைகள் ஊடாக எதிர்கால சந்ததிக்கு அளிப்பதன் மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மக்களிடையே எமது நாட்டின் உணவுக் கலாசாரத்தை விரிவுபடுத்துவதோடு இலங்கையின் அடையாளத்தை உலக அளவில் நிலைநிறுத்துவதற்கு உகந்த வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் செயற்படுத்த வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 16/2023

கௌரவ புத்திக பத்திறண,— இணையத்தின் ஊடாக விற்பனை செய்வதன் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற ஔடத தீத்தொழிலை ஒழித்தல்,— தற்போது இணையத்தின் ஊடாக தரமில்லாத ஔடதங்கள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் அழகு சாதனப் பொருட்களின் உற்பத்திகள் பெருமளவில் விற்பனை செய்யப்படுவதாலும், இந்த நிலைமை எமது நாட்டு மக்களின் உயிர் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தல் என்பதாலும், இந்த நிலைமையை ஒழிப்பதற்கு உகந்த வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயாரித்து செயற்படுத்த வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 17/2023

கௌரவ புத்திக பத்திறண,— பாடசாலைப் பிள்ளைகளின் பெறுமதியை சமூகமயப்படுத்தல்,— பாடசாலைப் பிள்ளைகள் பெரும்பாலும் தொடர்புறுவோராகிய பெற்றோர், ஆசிரியர்கள், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள், பாடசாலை வேன் சாரதிகள் போன்ற நபர்களுக்கு பிள்ளைகளின் பெறுமதி தொடர்பாக சமூகவியல் மற்றும் உளவியல் செயன்முறைகள் மூலம் எளிமையான முறையில் தெளிவுபடுத்தி நாட்டினதும் சமூகத்தினதும் எதிர்கால நல்லிருப்புக்காக சமூகச் சவால்களுக்கு மத்தியில் பிள்ளைகளைப் பாதுகாக்க வேண்டிய வழிமுறைகள் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் தேசிய மட்டத்திலான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் திட்டமிட்டு செயற்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 18/2023

கௌரவ புத்திக பத்திறண,— கடனுதவித் திட்டமொன்றின் மூலம் முதியோர் சமுதாயத்தின் பொருளாதாரத்தை வலுவூட்டுதல்,— 60 வயதைக் கடந்துள்ள முதியோர் சமுதாயத்தின் வாழ்வாதார வழிகளை வலுவூட்டுவதன் மூலம் ஒட்டுமொத்த இலங்கைப் பொருளாதாரத்தின் உற்பத்தியை அதிகரிப்பதற்கு அவர்களை பங்குகொள்ளச்செய்ய முடியுமென்பதாலும், குறித்த முதியோர் சமுதாயத்துக்கு வங்கிக் கட்டமைப்பினூடாக கடன் வசதிகள் வழங்கப்படாமையால் அவர்கள் சமூகத்தில் பாகுபாட்டுக்கு உள்ளாக்கப்படுவதாலும், 60 வயதைக் கடந்தவர்களுக்கு வங்கிக் கட்டமைப்பினூடாக கடனுதவி வழங்கும் முறையியலொன்றை நடைமுறைப்படுத்துவதற்குப் பொருத்தமான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 19/2023

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களை வலுவூட்டுதல்,— இலங்கையில் அரிசி விலையைக் கட்டுப்படுத்துவதற்கான ஆற்றலைக்கொண்ட சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்கள் இன்றளவில் பல சிரமங்களுக்கு முகங்கொடுத்துள்ளதனால், அச்சிக்கல்களைத் தீர்ப்பதற்காக அரசாங்கம் துரிதமான வேலைத்திட்டமொன்றை உருவாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.20/2023

கௌரவ நாலக பண்டார கோட்டேகொட,— பயிர்களை சேதப்படுத்துகின்ற மந்திகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தல்,— இலங்கையில் விவசாயப் பயிர்களுக்கு வன விலங்குகளினால் பெரும் சேதங்கள் ஏற்படுவதாலும், ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகத்தின் அறிக்கைகளின் பிரகாரம் விலங்குகளால் ஏற்படுகின்ற பயிர்ச் சேதமானது வருடாந்தம் சுமார் 40% அதாவது, 1800 கோடி ரூபாய்களை விட அதிகமென்பதாலும், அதிலும் மந்திகளினால் விவசாயப் பயிர்ச் செய்கைகளுக்கு ஏற்படும் சேதங்கள் படிப்படியாக அதிகரிக்கின்ற காரணத்தினால் எமது நாட்டின் விவசாயப் பெரு மக்களுக்கும் தேசிய பொருளாதாரத்துக்கும் நேரடி தாக்கம் ஏற்படுவதாலும், இலங்கை பௌத்த மற்றும் அகிம்சை நெறி கலாசாரத்துடன்கூடியதொரு நாடு என்ற வகையில் மந்திகளைக் கொல்வதன் மூலம் இப் பிரச்சினையைத் தீர்ப்பதை அனுமதிக்க முடியாது என்பதாலும், விஞ்ஞானபூர்வமான செயன்முறையொன்றின் மூலம் மந்திகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு உகந்த வேலைத்திட்டமொன்று அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.21/2023

கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ,— சிறுவர்களின் சுகாதாரக் கல்வி தொடர்பான நிகழ்ச்சித்திட்டமொன்றை பாடசாலை மட்டத்தில் பிரபல்யப்படுத்துதல்,— நச்சுத் தன்மைமிக்க உணவு வகைகளை உட்கொள்வதன் மூலம் இலங்கையில் சிறுவர்களின் ஆயுட்காலம் குறைவடைதல் மற்றும் கடுமையான நோய்களுக்கு ஆளாகுதல் நிகழ்வதாக பல்வேறு நிறுவனங்களினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதால் போசாக்குமிக்க உணவு வகைகளை உட்கொள்வதன் மூலம் உடற் சுகாதாரத்தையும் ஆரோக்கியத்தையும் விருத்தி செய்து கொள்ள முடியுமென விழிப்புணர்வு ஏற்படுத்தக்கூடிய வகையில் சிறுவர்களின் சுகாதாரக் கல்வி தொடர்பான நிகழ்ச்சித்திட்டமொன்றை அரசாங்கம் சுகாதாரப் பிரிவுடன் ஒன்றிணைந்து தயாரித்து நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.22/2023

கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன,— நுண்நிதி நிறுவனங்கள் மற்றும் குத்தகை கடன் வழங்கும் நிறுவனங்களை கடுமையான ஒழுங்குமுறைப்படுத்தலுக்கு உட்படுத்துதல்,— நுண்நிதி நிறுவனங்களின் செயற்பாடுகள் காரணமாக நகர்ப்புற மற்றும் கிராமிய சமூகம் பெரும் நிலைகுலைவுக்கு உட்பட்டுள்ளமையினாலும், நுண்நிதி மற்றும் குத்தகை கடன் தொடர்பில் குறிப்பிட்ட நிறுவனங்களின் தூண்டுதல் காரணமாக கடன் பெற்றுக்கொண்டுள்ள ஏராளமான குடும்பங்கள் தற்போது கடும் அதிர்ச்சிக்கு உள்ளாகியுள்ளமையினாலும், அந்த நிறுவனங்களின் வட்டி வீதங்கள் பல்வேறு அளவுகளில் காணப்படுவதனாலும், குத்தகை கடன் தவணைகளைச் செலுத்தத் தவறும் நபர்கள் குறிப்பிட்ட நிறுவனங்களின் பல்வேறுபட்ட அழுத்தங்கள் மற்றும் வன்முறைகளுக்கு ஆளாவதனாலும், நுண்நிதி நிறுவனங்கள் மற்றும் குத்தகை கடன் நிறுவனங்களை கடுமையான ஒழுங்குமுறைப்படுத்தலுக்கு உட்படுத்துவதற்கு அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரரிக்கின்றது.

பா. 23/2023

கௌரவ சட்டத்தரணி சாகர காரியவசம்,— பாடசாலை அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக பின்பற்ற வேண்டிய முறையியலை உள்ளடக்கிய சுற்றறிக்கையொன்றை வெளியிடல்,— பாடசாலை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குத் தேவையான நிதி வருடாந்தம் பெற்றோர்களிடமிருந்து தொடர்ச்சியாக அறவிடப்படுவதாலும், தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக சில பெற்றோர்களுக்கு மேற்படி நிதியினை வழங்குவதில் சிரமங்கள் காணப்படுவதால் அப் பெற்றோர்களின் பிள்ளைகள் வகுப்பறையில் அசௌகரியங்களுக்கு உள்ளாவதற்கு வாய்ப்புள்ளதாலும், பாடசாலை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குத் தேவையான நிதியினை எவ்வாறு திரட்ட வேண்டும் என்பது தொடர்பாகவும், மேற்படி நிதி தொடர்பான வரவு செலவு அறிக்கைகளை காட்சிப்படுத்த வேண்டிய விதம் தொடர்பாகவும், மேற்குறிப்பிட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பில் பின்னாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய விதம் தொடர்பாகவும் பின்பற்ற வேண்டிய முறையியலை உள்ளடக்கிய சுற்றறிக்கையொன்றை வெளியிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரரிக்கின்றது.

பா.24/2023

கௌரவ (பேராசிரியர்) ரஞ்சித் பண்டார,— இலங்கையில் ஆசிரியர்களுக்கு ஐந்தாண்டுகளுக்கு ஒரு தடவை இடமாற்றம் வழங்கப்படுதல்,— ஒரே பாடசாலையில் பல ஆண்டுகளாக பணியாற்றுவதன் மூலம் உருவாகும் தனிப்பட்ட தொடர்புகளால் சில பிள்ளைகளுக்கு சிற்சில சந்தர்ப்பங்களில் அநீதிகள் ஏற்படலாமென்பதாலும், சமூகத்தின் பல்வேறு படிநிலைகளைச் சேர்ந்த பிள்ளைகளுடன் பணியாற்றுவதன் மூலம் அவர்களின் மனநிலையை புரிந்துகொள்ளக்கூடிய ஆற்றல் மற்றும் அனுபவங்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்பு இழக்கப்படுவதாலும், அரசியல் மற்றும் சமூக தொடர்புகள் காரணமாக சுயாதீன கல்வி முறையொன்றைப் பேணிச் செல்வதில் இடையூறுகள் ஏற்படலாமென்பதாலும், சமூகத்திலுள்ள உப கலாசாரங்களை புரிந்துகொள்வதற்கான வாய்ப்புகள் நழுவிச் செல்வதாலும், பல்வேறான பிரதேச மொழிகள் மற்றும் கலாசாரங் களிலிருந்து அனுபவங்களைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவாக உள்ளதாலும், கல்வியை வழங்குதல் மற்றும் நற் சமூக பிரஜைகளை உருவாக்குதல் எனும் ஒரே நோக்கம் நிறைவேறும் கல்வி முறையொன்றை உருவாக்குவதற்காக அனைத்து ஆசிரியர்களுக்கும் ஐந்தாண்டுகளுக்கு ஒரு தடவை இடமாற்றம் வழங்குவதற்குப் பொருத்தமான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.25/2023

கௌரவ சஞ்சீவ எதிரிமான்ன,— அரச மரக் கூட்டுத்தாபனம் மற்றும் பொறுப்பு வாய்ந்த பிற நிறுவனங்களிலிருந்து அரச நிறுவனங்களுக்காக அலுவலக உபகரணங்களைப் பெற்றுக்கொள்ளுதல்,— கடந்த காலத்தில் இலங்கையின் அரச மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்களால் அலுவலக உபகரணங்களுக்காக பயன்படுத்தப்பட்ட மர தளபாடங்கள் மிக நீண்டகாலம் உபயோகப்படுத்தப்பட்ட போதிலும், தற்போது அந்த நிறுவனங்கள் பயன்படுத்தும் அலுவலக உபகரணங்கள் ஒட்டுப்பலகை மற்றும் ஏனைய செயற்கை தகடு வகைகள்கொண்டு தயாரிக்கப்படுவதால் அவை மிகக் குறுகிய காலத்தில் அழிவடைவதாலும், தற்போதைய இந்த அலுவலக உபகரணங்களைத் தயாரிப்பதற்காக வெளிநாடுகளிலிருந்து மூலப்பொருட்கள் இறக்குமதி செய்யப்படுவதால் வெளிநாடுகளுக்கு அதிகளவில் பணம் சென்றடைவதாலும், இத்தகைய பொருட்கள் எமது சூழல் தொகுதிக்கு வெளியிடப்படுவதால் பாரிய தாக்கம் ஏற்படுவதாலும், அரச மரக் கூட்டுத்தாபனம் மற்றும் பொறுப்பு வாய்ந்த பிற நிறுவனங்களிலிருந்து அரச நிறுவனங்களுக்காக அலுவலக உபகரணங்களைப் பெற்றுக் கொள்வதற்குப் பொருத்தமான ஒரு வேலைத்திட்டத்தை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.